# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 23 வியாழக்கிழமை 09.10.2025 கதிர் 334



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel






## யாழில் 'அணையா விளக்கு' தூபி உடைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 09

யாழ்ப்பாணத்தில் 'அணையா விளக்கு' தூபி விசமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

செம்மணியில் "யாழ்ப்பாணம் வரவேற்கிறது" வளைவுக்கு அருகில் கடந்த ஜூன் மாத இறுதியில் செம்மணி மனிதப் படுகொலைக்கு நீதி கோரி 'அணையா விளக்கு' போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் போது 'அணையா விளக்கு' ஏற்றப்பட்டு இருந்தது. போராட்டத்தின் முடிவில் அப்பகுதியில் 'அணையா விளக்கு' நினைவுத் தூபி ஒன்றும் அமைக்கப்பட்டது.

குறித்த நினைவுத் தூபியே தற்போது விசமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

# ஜெனிவாவில் இலங்கை சிக்க முன்னைய அரசே காரணம்!

## நாடாளுமன்றில் அமைச்சர் விஜித ஹேரத் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 09

2009 இல் போர் முடிவடைந்த பின்னர், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் மூலம், இலங்கையின் போர் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் குறித்த பல தீர்மானங்களை, முன்னைய அரசாங்கங்கள் உரிய முறையில் கையாளவில்லை என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் குற்றம் சுமத்தினார்.

கடந்த மாதம் நடைபெற்ற 60வது மனித உரிமைகள் பேரவை அமர்வு மற்றும் அதன் முடிவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து இன்று நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

முன்னைய எந்த அரசாங்கமும், தேசியப் பிரச்சினையை முறையாக நிர்வகிக்காமையே, ஜெனிவாவில் நடக்கும் இந்தச் செயற்பாட்டுக்கான அடிப்படைக் காரணமாகும் என்று விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

வாக்கெடுப்பில் தோல்வியடைவது உறுதி என்று தெரிந்திருந்தும், முன்னைய அரசாங்க உறுப்பினர்கள் பொதுமக்களின் வரிப்பணத்தை வீணடித்ததாகவும் வாக்கெடுப்பை கோருவது ஏற்கனவே சர்வதேசமயமாக்கப்பட்ட இந்தப் பிரச்சினையை உள்நாட்டுத் தளத்திற்குக் கொண்டு வந்து தீர்ப்பதற்கான வாய்ப்பை அடைத்து விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று அவர் ஆற்றிய உரையின் முழுமையான விளக்கம் வருமாறு:-

"இலங்கை குறித்து மனித உரிமைகள் கவுன்சிலின் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது முதல் முறை அல்ல. 1980களில், 2009இல் போர் முடிவடைந்த பிறகும், தற்போதைய மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் பழைய அமைப்பான மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் இலங்கையின் போர் தொடர்பான மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் குறித்து பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2009லிருந்து மட்டும் பார்த்தால்,

8➤

## பாதுகாப்பு கோரி முறைப்பாடு



யாழ்ப்பாணம், ஒக். 09

வாள் வெட்டு மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தமது பிள்ளைகளை அதில் ஈடுபடுமாறு வற்புறுத்திப் பல்வேறு இடையூறுகளை மேற்கொள்ளும் நபரிடமிருந்து தமது பிள்ளைகளின் பாதுகாப்பையும் பிரதேச வாழ் மக்களது இயல்பு வாழ்வையும் உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி யாழ். அரசடி வாழ்

7➤

## குருக்கள்மடம் மனிதப் புதைகுழி வழக்கு: வரும் 27ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு



மட்டக்களப்பு, ஒக். 09

மட்டக்களப்பு, குருக்கள்மடத்திலுள்ள மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

1990 ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு

7➤

## அரியாலையில் கழிவுகளைக் கொட்ட வந்தவர்களை மறித்த 8 பேர் கைது!



யாழ்ப்பாணம், ஒக். 09

யாழ். அரியாலைப் பகுதியில் கழிவுகளைக் கொட்ட வந்தவர்களை மறித்து அடாவடியில் ஈடுபட்டார்கள் எனக் குற்றஞ்சாட்டி 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலைப் பகுதியில் நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளைத் தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரியாலை மக்கள் நேற்று புதன்கிழமை போராட்டத்தில்

7➤

## இந்திய மீனவர்கள் 47 பேர் சிக்கினர்!



யாழ்ப்பாணம், ஒக். 09

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த 47 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் மற்றும் நெடுந்தீவுக்கு

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# நல்லதண்ணி தேயிலை தொழிற்சாலையில் தீ விபத்து



கொழும்பு, ஒக் .09

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நல்லதண்ணி, லக்ஷபான தோட்டத்தின் தேயிலை தொழிற்சாலையில் இன்று அதிகாலை 1 மணியளவில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டது.

தேயிலை தூள் உற்பத்திப் பிரிவில் ஏற்பட்ட தீ, தேயிலை இலைகள் சேமித்து வைக்கப்பட்டிருந்த சேமிப்பு அறைக்கும் பரவியதாகவும், பொட்டலம் கட்டப்பட்ட தேயிலைத் தூளும் பெருமளவில் எரிந்து நாசமானதாகவும் எமது செய்தியாளர் தெரிவித்தார்.

பரவிய தீ, தோட்ட மக்களால் ஏனைய பகுதிகளுக்கு பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டது.

இருப்பினும், தோட்ட நிர்வாகம் திட்டமிட்டு தீயை மூட்டியதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர். தீயினால் ஏற்பட்ட சேதம் இன்னும் மதிப்பிடப்படவில்லை. மேலும் தீயில் யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை.

தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், தீ விபத்துக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை.

நல்லதண்ணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




# 151வது உலக தபால் தினம் இன்று கொண்டாடப்படுகிறது

கொழும்பு, ஒக் .09

இன்று 151வது உலக தபால் தினம் உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறது.

இந்த நிகழ்வையொட்டி, இலங்கையில் 56வது தேசிய தபால் தின விழா இன்று காலை பதுளை தபால் வளாக கேட்போர் கூடத்தில், சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெறவுள்ளது.

உலக தபால் ஒன்றியத்தின் முடிவின்படி, உலகெங்கிலும் உள்ள 193 நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 09 அன்று உலக தபால் தினத்தைக் கொண்டாடுகின்றன.

1874 ஆம் ஆண்டு அக்டோபர் 09 அன்று, பல நாடுகள் உலக தபால் ஒன்றியத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. அதன் நினைவாக, 1969 ஆம் ஆண்டு முதல் இந்த நாள் உலக தபால் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இதற்கிடையில், தபால் ஊழியர்கள் மேலதிக நேர ஊதியத்தை மோசடியாகப் பெற்றதாக தபால் திணைக்களத் தலைவரின் கூற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், இன்று தபால் தொழிற்சங்கங்கள் கருப்புப் பட்டை அணிந்து பணிக்குச் செல்லவுள்ளதாக அறிவித்துள்ளன.

இது தொடர்பாக இன்று இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளது. (ஐ)



# வரலாற்று பாடத்தை கட்டாய பாடமாக ஆக்குங்கள்!



கொழும்பு, ஒக் .09

நமது நாட்டு மக்கள் பொய்களால் எப்படி ஏமாற்றப்பட்டு உதவியற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர் என்பதைப் பார்க்கும்போது, பல விடயங்களை சுட்டிக்காட்ட முடியும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50ூ பங்களிக்கும், 40 இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தரும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையினர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கோவிட் - 19 தொற்றுநோய் மற்றும் வங்குரோத்து நிலை காரணமாக உதவியற்ற நிலையில் இருக்கும் சமயத்தில், அவர்களின் 260,000 இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சிகள் மூடப்பட்டிருக்கின்றன. தற்போதைய அரசாங்கத்தின் வளமான நாடு, அழகான வாழ்க்கை எனும் கொள்கை அறிக்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையினருக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். பராட்டே சட்டம் இரத்துச் செய்யப்படும். வட்டி விகிதங்கள் குறைக்கப்படும். வியாபார நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல தக்க மூலதனம் வழங்கப்படும். கடன் நிவாரணம் வழங்கப்படும் என்று தற்போதைய அரசாங்கம் வாக்குறுதி வழங்கி இருந்தாலும், இன்று அது எதுவும் நடக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் மிகவும் நியாயமற்ற முறையின் கீழ் நமது நாட்டின் தொழில்முனைவோரை பழிவாங்கி வருகிறது. திரு. கோசல விதானாராச்சி 10 ஆண்டுகளுக்கு 38 மில்லியன் கடனைப் பெற்றிருந்தாலும், இன்றுவரை, அவர் 52.4 மில்லியனை செலுத்தியுள்ளார். மொத்தக் கடனான 38 மில்லியனை அடைக்க அவர் மேலும் 80 மில்லியனைக் கோர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். மொத்த தொகை 137 மில்லியன் ஆகும். இந்தத் தரவுகள் அனைத்தையும் சபைக்கு சமர்ப்பிக்கிறேன். இந்த அநீதிகள் அனைத்தும் தற்போதைய அரசாங்கத்தாலயே முன்னெடுக்கப்படுகின்றன. அரசாங்கம் இன்று வாக்குறுதியளித்ததைச் செய்யாதிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தால் கூட நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை பாதுகாக்க முடியாதுபோயுள்ளது, முந்தைய அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை மனதில் கொண்டு பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இரத்து செய்த போதிலும், கடனில் மூழ்கியிருந்த நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் கடன்களை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த அரசாங்கம், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இலக்காகக் கொண்டு, பராட்டே சட்டத்தை அமுல்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தது. ஆனால் கடனை மறுசீரமைக்கவில்லை. கோயபல்ஸ் கொள்கையை யார் பின்பற்றுகிறார்கள் என்பது முழு நாட்டிற்கும் தெளிவாகத் தெரிகிறது.

38 மில்லியன் கடன் பெற்ற தொழிலதிபர் ஒருவர் இன்று 137 மில்லியன் திருப்பிச் செலுத்த வேண்டி காணப்படுகின்றன.

போதைப்பொருள் போலவே, இணையவழி கடன் மாபியாவையும் ஒழிக்க வேண்டும்,

நாட்டில் இணையவழி கடன் மாபியா நடந்து வருகிறது. இது குறித்த விடயங்களை எதிர்க்கட்சி பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சுட்டிக்காட்டியுள்ளன. இந்தக் கடன் மாபியா முன்னெடுப்புகள் மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாது, தமது தனிப்பட்ட செல்வத்திலிருந்து அதிகப்படியான வட்டிக்கு கடன் வழங்கி, அதன் மூலம் இந்தக் கடன்களை நியாயமற்ற முறையில் அறவிட்டு வருகின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கம், இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காதிருப்பது பாரிய பிரச்சினையாகும். சாதாரண உழைக்கும் மக்களின் பணத்தை இவர்கள் சுரண்டுகின்றனர்.

இன்று லீசிங் நிறுவனங்கள் நாட்டின் சட்டங்களை மீறி, வாகனங்களை வலுக்கட்டாயமாக கையகப்படுத்தி வருகின்றன.

வாகனமொன்றை கொள்வனவு செய்து, அதற்கு லீசிங் எடுத்து, லீசிங் காலாவதியான பிறகு அதை மீண்டும் கையகப்படுத்துவது சட்டத்திற்குள் முன்னெடுக்கப்பட வேண்டும். நியாயமான நடைமுறையாக இது அமைந்து காணப்பட வேண்டும் என்றாலும், 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தை மீறி, லீசிங் நிறுவனங்கள், பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து, இந்தச் சட்டத்தை மீறி, பொலிஸ் மா அதிபர் வழங்கிய பரிந்துரைகளையும் கிடப்பில் போட்டு, குண்டர்களையும் சண்டியர்களையும் பயன்படுத்தி வாகனங்களை வலுக்கட்டாயமாக கைப்பற்றி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கத்திடம் தீர்வுகள் இல்லை.

பொலிஸ் ஆணைக்குழு சுயாதீனமாக செயல்பட இடமளியுங்கள்,

பொலிஸ் ஆணைக்குழுவின் சுயாதீனத்தை பாதுகாக்க நாம் அழைப்பு விடுக்கிறோம். அரசியல் தலையீடுகளை இதில் பிரயோகிக்கக் கூடாது. சிறந்த ஆட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கத்தைச் செய்து, அதிகாரங்களுக்கிடையேயான தடைகள் மற்றும் சமன்பாடுகள் மூலம் வலுவான பொலிஸ் சேவையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அரசாங்கம் இதற்கு தடையாக இருந்து வருகிறது. எனவே, பொலிஸ் ஆணைக்குழுவின் சுயாதீனத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கோரிக்கை விடுத்தார்.

வரலாற்று பாடத்தை கட்டாய பாடமாக ஆக்குங்கள்,

கல்வியை நவீனமாக்க வேண்டும், அபிவிருத்தியடைந்த சமூகத்தில் சிறார்கள் தலைமுறையை அதற்கேற்ப உருவாக்குவது போல, கடந்த காலத்தை மறந்து விடவும் முடியாது. அரச காலத்தில் நமது நாட்டின் பெருமைகளை குழந்தைகள் அறிய வேண்டும். ஏகாதிபத்திய சக்திகள் இந்த நாட்டை ஆதிக்கத்துக்குட்படுத்திய போது, அந்த ஏகாதிபத்தியத்தை தோற்கடிக்க இந்த நாட்டின் மன்னர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் வரலாற்றை அழித்து விட முடியாது. திறமை, ஆற்றல் மற்றும் தொழில்முறை திறன் கொண்ட இளம் தலைமுறையை உருவாக்குவதில் நமது அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் வரலாறு கட்டாய பாடமாக அமைந்து காணப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஐ.நா மனித உரிமைகள் பேரவை தேவையற்ற அரங்கு - கஜேந்திரகுமார்



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விவகாரத்தை கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போட்டு, மேற்கத்திய மற்றும் இந்திய வல்லரசுகளின் கருவியாக மட்டுமே பயன்படுத்தப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விமர்சித்தார்.

அவர், இந்த அரங்கை “தேவையற்றது” எனக் கூறி, கட்சி அரசியலைத் தாண்டி, தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதிமன்றத்தின் மூலம் நீதி கோருபவர்களுடன் இணைந்து செயல்படத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை, யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய காஜேந்திரகுமார் பொன்னம்பலம், பின்வருமாறு கூறினார்:

“ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விவகாரம் சுமார் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் உள்ளது.

இது மேற்கத்திய மற்றும் இந்திய வல்லரசுகளின் அரசியல் கருவியாக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. 2012இல், மஹிந்த ராஜபக்ச ஆட்சியின் போது, ‘அவரது ஆட்சி முடிந்தவுடன் பொறுப்புக்கூறலைப் பார்ப்போம்’ எனக் கூறப்பட்டது.

2015இல் நல்லாட்சி அரசு பொறுப்பேற்றபோது, ‘இது நல்ல ஆட்சி, இதில் பலவற்றைச் சாதிக்கலாம்’ எனக் கூறி, இலங்கை அரசுக்கு இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

நாங்கள் இவ்வாறான உண்மைகளை அம்பலப்படுத்துவதால், சிலர் எங்களைக் குறைகூறுகின்றனர். ஆனால், அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. 2009 மே 17இல், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன், இறுதி யுத்த நிலைமை குறித்து மூன்று தூதரகங்களுக்கு (இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா) தகவல் தெரிவிக்குமாறு என்னிடம் கூறினார்.

அதன்படி, நானே அந்தத் தகவல்களை அளித்தேன். இதனை விக்கிலீக்ஸ் மூலம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு, சர்வதேச நீதிமன்றத்தின் மூலம் நீதி கிடைக்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பு. ஆனால், சில தரப்புகள் இவ்விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தொடர்ந்து தக்கவைக்க முயல்கின்றன.

சர்வதேச அரசியலைப் பயின்றவன் என்ற முறையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விவகாரத்தை மலினப்படுத்தும் ஒரு தேவையற்ற அரங்கம் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

இவ்விவகாரத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல நாங்கள் முயற்சிக்கும் வேளையில், சிலர் அதனைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.எனவே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதிமன்றத்தின் மூலம் நீதி பெறுவதற்கு, கட்சி அரசியலைத் தாண்டி செயல்பட விரும்புவோருடன் இணைந்து நாங்கள் பயணிக்கத் தயாராக உள்ளோம்.” (ஐ)



# மின்சார கட்டண திருத்தம் தொடர்பான இறுதி தீர்மானம்

கொழும்பு, ஒக் .09

2025 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது மின்சார கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக நடத்தப்பட்ட அமர்வுகளில் சுமார் 500 பேர் தமது யோசனைகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்ததாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு, நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்தக் கருத்து சேகரிப்பு நடவடிக்கைகள் செப்டம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகின.

இறுதி அமர்வு மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு, நேற்று (08) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வுகளில் முன்வைக்கப்பட்ட அனைத்து யோசனைகளையும் கருத்தில் கொண்டு, மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இறுதி முடிவு இந்த மாத இறுதிக்குள் அறிவிக்கப்படவுள்ளது.

இதற்கிடையில், இலங்கை மின்சார சபை (CEB) சமீபத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த தனது முன்மொழிவில், மின்சார கட்டணங்களை 6.8 சதவீதம் உயர்த்துவதற்கு பரிந்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாலியல் வன்கொடுமை குற்றவாளி தஷ்வந்த் விடுதலை நீதியை நம்பும் மக்களுக்கு கிடைத்த பெரும் ஏமாற்றம்: எஸ்டிபிஐ கருத்து!!



பாலியல் வன்கொடுமை குற்றவாளி தஷ்வந்தை விடுவிப்பது, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு மட்டுமல்லாமல், நீதியை நம்பும் முழு சமூகத்திற்கும் பெரும் ஏமாற்றமாகும் என எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சென்னை போரூரில் 2017ஆம் ஆண்டு 6 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட வழக்கில், ஐகோர்ட்டால் மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட குற்றவாளி தஷ்வந்த், சுப்ரீம் கோர்ட்டால் விடுதலை செய்யப்பட்டிருப்பது மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. ஆதாரங்களில் உறுதியின்மை என்ற காரணத்தைக் காட்டி இத்தகைய கொடூரக் குற்றவாளியை விடுவிப்பது, நீதித்துறையின் செயல்பாடு குறித்து பல கேள்விகளை எழுப்புகிறது.

சிசிடிவி காட்சிகள் மற்றும் டிஎன்ஏ ஆய்வுகளில் உறுதியின்மை இருப்பதாகக் கூறி, வன்கொடுமை செய்து ஒரு சிறுமியின் உயிரைப் பறித்த குற்றவாளியை விடுவிப்பது, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு மட்டுமல்லாமல், நீதியை நம்பும் முழு சமூகத்திற்கும் பெரும் ஏமாற்றமாகும். போரூர் சம்பவம் ஒரு தனிமனிதக் குற்றம் மட்டுமல்ல இது சமூகத்தின் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் சிதைக்கும் செயலாகும். நாட்டை உலுக்கிய இந்த வழக்கில் ஆதாரப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி, சந்தேகத்தின் பலனை குற்றவாளிக்கு வழங்குவது, பாதிக்கப்பட்டவர்களின் நீதிக்கான குரலை அடக்குவதற்கு ஒப்பாகும்.

இத்தகைய தீர்ப்புகள் குற்றவாளிகளைத் தைரியப்படுத்துவதோடு, எதிர்காலத்தில் இதுபோன்ற குற்றங்களைத் தடுப்பதற்கு தடையாகவும் அமைகின்றன. ஆதார சேகரிப்பு முறையில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்யாமல் குற்றவாளிகளை விடுவிப்பது, நீதித்துறையின் நம்பகத்தன்மை குறித்து பல கேள்விகளை எழுப்புகிறது. ஒரு சிறுமியின் உயிர், அவளது குடும்பத்தின் துயரம், சமூகத்தின் கோபம் ஆகியவற்றை ஆதாரமின்மை என்ற ஒற்றை வார்த்தையால் துடைத்தெறிய முடியாது.

பெண் குழந்தைகளின் பாதுகாப்பையும், சமூகத்தின் நம்பிக்கையையும் உறுதிப்படுத்த, இதுபோன்ற வழக்குகளில் கடுமையான நடவடிக்கைகளும், ஆதார சேகரிப்பில் துல்லியமும் அவசியமாகிறது. தஷ்வந்த் போன்றவர்கள் விடுதலை செய்யப்படுவது, நீதியை நம்பி வாழும் மக்களுக்கு கிடைத்த பெரும் ஏமாற்றமாகும். ஆகவே, இந்தத் தீர்ப்பு உடனடியாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும், எந்த வகையிலும் குற்றவாளிகள் தப்பிக்க அனுமதிக்கப்படக் கூடாது என்றும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## அதிமுகவின் 54வது ஆண்டு தொடக்க விழாவை முழுவதும் நடத்த எடப்பாடி புழனிசாமி உத்தரவு



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

புரட்சித் தலைவி எம்.ஜி.ஆர். மாளிகை

எடப்பாடி K. பழனிசாமி

தேதி : 9.10.2025

தலைமைக் கழக அறிவிப்பு

கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர்
'புரட்சித் தமிழர்' திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் முக்கிய அறிவிப்பு

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
54–ஆவது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டங்கள்!
17.10.2025 – வெள்ளிக் கிழமை, 18.10.2025 – சனிக் கிழமை



அதிமுகவின் 54வது ஆண்டு தொடக்க விழாவை ஒட்டி வரும் 17 ,18ம் தேதிகளில் மாநிலம் முழுவதும் பொதுக்கூட்டங்களை நடத்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், கழக நிறுவனத் தலைவர் 'பொன்மனச் செம்மல்' புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மாவால் போற்றி வளர்க்கப்பட்டு, பல்வேறு வரலாற்றுச் சாதனைகளைப் படைத்திட்ட மாபெரும் மக்கள் பேரியக்கமாம் 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 17.10.2025 வெள்ளிக் கிழமையன்று 54-வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு, 17.10.2025, 18.10.2025 ஆகிய இரண்டு நாட்கள் 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக 54-வது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டங்கள்' கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் 82 மாவட்டங்களிலும் கழக அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் நடைபெற உள்ளன.

பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ள இடங்கள். அவற்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவோர் விபரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் வெளியிடப்படுகிறது. கழக சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தாங்கள் சார்ந்த மாவட்டங்களில் நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்கள் மாவட்டத்தில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்திற்கான நிகழ்ச்சிகளை கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மன்றம், புரட்சித் தலைவி அம்மா பேரவை, எம்.ஜி.ஆர். இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, அண்ணா தொழிற்சங்கம், வழக்கறிஞர் பிரிவு, சிறுபான்மையினர் நலப் பிரிவு, விவசாயப் பிரிவு, மீனவர் பிரிவு, மருத்துவ அணி, இலக்கிய அணி, அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி, இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, வர்த்தக அணி மற்றும் கலைப் பிரிவு உட்பட கழகத்தின் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகளுடனும் உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளுடனும் இணைந்து, சிறப்புப் பேச்சாளர்களுடன் தொடர்புகொண்டு, பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தி, அதன் விபரங்களை தலைமைக் கழகத்திற்கும், அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களுக்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும் புதுச்சேரி, காரைக்கால் மாவட்டம், கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா, கேரளா, புதுடெல்லி மற்றும் அந்தமான் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும், 17.10.2025 அன்று ஆங்காங்கே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது திருஉருவச் சிலைகளுக்கும், படங்களுக்கும் மாலை அணிவித்து இனிப்பு வழங்கியும் ஏழை, எளியோருக்கு அன்னதானம் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தங்கள் மாவட்டங்களில், கழகத்தின் 54வது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் நடத்தப்பட்டதன் விபரங்களையும் கூட்டத்தில் கலந்துகொண்ட சிறப்புப் பேச்சாளர்கள் குறித்த விபரங்களையும் அதே போல், தங்கள் மாவட்டத்தில் ஆங்காங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் விபரங்களையும் தலைமைக் கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ)

## டாடா டிரஸ்ட்டுக்குள் வெடித்த அதிகார மோதல்: நிறுவனத்தை பாதுகாக்க ஒன்றிய அரசு அறிவுறுத்தல்!

*டாடா குழுமத்திற்கு வெடித்துள்ள அதிகார மோதலை தொடர்ந்து நிறுவனத்தின் நிலை தன்மையை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒன்றிய அரசு அறிவுறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நியமன இயக்குநர்களை நியமிப்பது உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக டாடா டிரஸ்ட்டின் அரங்காவலர்கள் மத்தியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு மோதலாக மாறி உள்ளது. செப்.11ம் தேதி நடைபெற்ற டாடா டிரஸ்ட்டின் உயர்மட்ட நிர்வாக குழு கூட்டத்தில் டாடா டிரஸ்ட்டின் தலைவர் நோயல் டாடா மற்றும் துணைத் தலைவரும், அறங்காவலருமான வேணு சீனிவாசன் ஆகியோர் முன்னாள் பாதுகாப்பு செயலர் விஜய் சிங்கின் மறு நியமனத்தை முன்மொழிந்துள்ளனர்.*

*இதனை அறங்காவலர்களின் ஒருவரான மேஹாலி மிஸ்டரி உள்ளிட்ட 4 அறங்காவலர்கள் விஜய் சிங்கின் மறு நியமனத்தை எதிர்த்ததால் பிரச்சனை ஏற்பட்டது. அதில் மூவர் இணைந்து மெஹலி மிஸ்ட்ரியை நியமிக்க முன்மொழிந்த நிலையில், அதனை சீனிவாசன் நிராகரித்ததால் பதற்றம் பற்றி கொண்டது. இந்த சூழலில் டாடா குடும்ப விசுவாசியாக அறியப்படுவோர் விஜய் சிங் தனது பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், நோயல் டாடாவை பதவியில் இருந்து இறக்க மெஹலி மிஸ்ட்ரி தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. டாடா சன்ஸ் நிறுவனத்தில் 18 விழுக்காடு பங்குகளை வைத்துள்ள ஷாபூர்ஜி பல்லோன்ஜி குழுமத்துடன் மெஹலி மிஸ்ட்ரிதொடர்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்த சூழலில் டாடா டிரஸ்ட் தலைவர் நோயல் டாடா, துணைத்தலைவர் வேணு சீனிவாசன் மற்றும் டாடா சன்ஸ் தலைவர் சந்திரசேகரன் ஆகியோர் ஒன்றிய அமைச்சர்கள் அமித் ஷா மற்றும் நிர்மலா சீதாராமன் ஆகியோரை சந்தித்தனர்.*

*அப்போது நிறுவனத்தின் நிலைத்தன்மையை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஒன்றிய அமைச்சர் அமித் ஷா கேட்டுக்கொண்டதாக கூறப்படுகிறது. அதேபோல் இந்த விவகாரம் டாடா சன்ஸ் நடவடிக்கைளை பாதிக்கும் வகையில் இல்லாமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்கவும், நிறுவனத்தின் நலனுக்கு எதிராக இருக்கும் அறங்காவலர்களை நீக்குவது உட்பட தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஒன்றிய அரசு கேட்டுள்ளது. இப்படியான பரபரப்பான சூழலில் அறங்காவலர் குழு மீண்டும் கூட உள்ளது. (ஐ)*



# பெரியாரின் பெண்ணியம் அன்றும், இன்றும்!

1942 ஆம் வருடம் வெளிவந்த தந்தை பெரியார் அவர்களின் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்கிற இந்தப் புத்தகத்தை எத்தனை முறை படித்தாலும், ஒவ்வொரு முறையும் மனதிற்கு நெருக்கமான புத்தகமாகவும், மனதிற்கு வலிமை சேர்க்கும் ஒரு புத்தகமாகவும், இந்த புத்தகம் அமைகின்றது.

பத்து அத்தியாயங்கள் மட்டுமே கொண்ட ஒரு புத்தகம், பெண்களின் மொத்த பிரச்சினைகளுக்கான விடைகளையும் எப்படி தெளிவாகச் சொல்லமுடியும் என்ற எண்ணத்திற்கு, 'முடியும்' என்ற ஒற்றை பதிலாய் இந்த புத்தகம் நின்று பேசுகின்றது. இத்தனை வருடங்களைக் கடந்தும், இன்றும் பேசுபொருளாக ஒரு புத்தகம் இருப்பதே, இந்தப் புத்தகத்தின் முதல் வெற்றி.

இந்தப்புத்தகத்தில்உள்ள ஒவ்வொரு அத்தியாயத்தையும் தனித்தனியாக எடுத்து, 'இன்றைய கால சூழலுக்கு ஏற்றது போல் தந்தை பெரியாரின் வரிகளில் உள்ள உண்மைத்தன்மையை உணர்ந்து இந்தச் சமுதாயம் தன்னை மாற்றிக் கொண்டதா?' என்கிற கேள்வியை நோக்கிய, என் தேடலை இங்கு நான் எழுத விரும்புகிறேன்.

முதல் அத்தியாயம், கற்பு பற்றி தெளிவாகக் கூறுகிறது. கற்பு என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவான ஒன்று என்பதை, தந்தை பெரியார் பல விளக்கங்களுடன் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். 'கல் என்ற சொல்லில் இருந்து வந்தது தான் கற்பு என்றும், அதன் பொருள் சொல் தவறாமை, நாணயம், சத்தியம், ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல்' என்று பல பொருள் கொண்டது என்றும் கூறியுள்ளார்.

மேலும், தந்தை பெரியாரின் கூற்றுப்படி, மகளிர் நிறை என்ற சொல்லில் வரும் 'நிறை' என்பது அறிவின்மை, உறுதிப்பாடு, மற்றும் கற்பு என்று பொருள் கொண்டது. அழிவில்லாதது மற்றும் உறுதியுடையது என்றும் பொருள் கொள்ள முடியும். அழிவில்லாதது என்ற வார்த்தைக்கு சுத்தம், கெடாதது, மாசற்றது என்ற பொருளும் ஏற்கத்தக்கது.

கற்பை தந்தை பெரியார் பின்வருமாறு விளக்கியுள்ளார், 'சுத்தம் என்கின்ற வார்த்தையும், கெடாதது என்கின்ற கருத்தில்தான் ஆங்கிலத்திலும் காணப்படுகிறது. அதாவது **(CHASTITY)** என்கின்ற ஆங்கில வார்த்தைப்படி வர்ஜினிட்டி **(VIRGINITY)** என்பதே பொருள் ஆகும். அதை அந்தப் பொருளின்படி பார்த்தால் இது ஆணுக்கென்றோ, பெண்ணுக்கென்றோ சொல்லாமல் பொதுவாக மனித சமூகத்திற்கே' என்று கற்பு பற்றி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இன்றுவரை, கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே என்றும், அதனை காப்பதே பெண்ணின் முதல் கடமை என்றும், அதனைக் காப்பதே குடும்ப கௌரவம் என்றும் இன்றுவரை பார்க்கப்படுகின்றது. இன்றும் ஒழுக்க விதிகளுக்கு பெண்களே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியுள்ளது, இதில் எந்த மாற்றமும் இல்லை.

அன்று எழுதப்பட்ட இலக்கியங்களையும், இலக்கணங்களையும், புராணக் கதைகளையும் படிக்கும் போது, அவற்றை எழுதும்போதே, பெண் அடிமையையும் சேர்த்தே எழுதிவிட்டனர் என்பது போன்ற எண்ணங்கள் உதிக்கின்றன. இன்றும் எல்லா ஊடகங்களும், கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே என்பது போல ஒரு மாயத் திரையை ஏற்படுத்தியுள்ளனர்.

குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், திரைப்படங்களில், சின்னத் திரை தொடர்களில் வரும் வசனங்கள் பெண்களை மேலும், மேலும் இந்த ஒழுக்க நிலை சார்ந்தே பலவீனப்படுத்துகின்றன. நாயகனைப் பழிவாங்க நினைத்தால், நாயகனின் சகோதரியை, மனைவியை வன்கொடுமைகளுக்கு ஆளாக்குவது, பாதிக்கப்பட்ட பெண் தான் மாசுபடுத்தப்பட்டதாக நினைத்து தற்கொலை செய்து கொள்வது, நாயகன் இதனை குடும்ப கௌரவத்துடன் ஒப்பிட்டு வில்லனைப் பழிவாங்குவது, இதுவே நம் ஊடகங்களின் மைய கதைக் கருவாக இருக்கிறது. பல வருடங்களாக இந்தக் கருத்தில் எந்த மாற்றமும் இல்லை, மாறியது நாயகனும், நாயகியும், வில்லனும் மட்டுமே.

இன்றுவரை வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட ஒரு பெண் தற்கொலை செய்து கொள்வதாக மட்டுமே திரைப்படங்களில் சித்தரிக்கப்படுகின்றது. வன்கொடுமைகளுக்கு பிறகு, எப்படி தனக்கான நீதியை பெற வேண்டும், தன் வாழ்வை எப்படி அமைத்துக் கொள்ளவேண்டும் என்பன போன்ற பெண்களுக்கு வழிகாட்டும் திரைப்படங்கள் மிகவும் அரிதாகவே எடுக்கப்படுகின்றன.

இயல், இசை, நாடகம் என்று எந்தத் துறையாக இருந்தாலும் ஆண்களின் கட்டுப்பாட்டில் மட்டுமே இன்றும் இருப்பதால், இன்றும் கற்பின் நிலைப்பாடு மாறவில்லை. மக்களிடம் நேரடியாக எளிதில் சென்று சேரும் ஊடகங்கள் கற்பு பெண்களுக்கு மட்டுமே என்ற தவறான புரிதலைத்தான் மக்கள் மனதில் ஆழமாக பதிய வைக்கின்றனர்.

இந்தச் சமூகத்தில் கற்பு என்ற வார்த்தை ஆண், பெண் இருவருக்கும் பொதுவான ஒரு நீதியாக இருந்தால், கற்பு என்ற சொல் பெண்களை மட்டும் பெரிதும் பாதித்து இருக்காது. அன்றும், இன்றும் சமுதாயத்தின் ஒழுக்க விதிகளில் எந்த மாற்றமும் இல்லை.

இலக்கியங்களில் காதல், அன்பை வெளிப்படுத்தும் இடங்களில் தலைவனுக்கும், தலைவிக்கும் சரிசமானமான 'நாயகன்-நாயகி, தலைவன்-தலைவி' என்ற சொற்களைப் பயன்படுத்தும் போது, கற்பு என்பது ஏன் பெண்களுக்கு மட்டுமே உரியது என்று மாறவேண்டும். இந்தக் கேள்வியை தந்தை பெரியார் பல ஆண்டுகளுக்கு முன்பே எழுப்பி இருந்தாலும், இன்று வரை எந்த மாற்றமும் இல்லாமல் பெண்கள் ஒழுக்க விதிகளைச் சுமந்தே வாழ்கின்றனர்.

மேலும் எந்தப் பெண் தன் கணவரை கடவுளாக நினைத்து, அவனுக்கு பணிவிடைகள் செய்து, அவனை அல்லாமல் வேறு ஒருவனை சிந்தையினாலும் நினைக்காமல் வாழ்கிறாளோ அவளே கற்புடையவள் என்ற கருத்தாக்கம், இங்கு பெண்களின் மேல் திணிக்கப்பட்டுள்ளதால், இன்று பெண்கள் படித்து, நல்ல வேலையில் இருந்தாலும், குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் பெண்கள் மட்டுமே சுமக்கும் அவல நிலை இன்றும் தொடர்கின்றது.

'பதி' என்ற வார்த்தைக்கு அதிகாரி, எஜமான், தலைவன் என்கிற ஆளுமை சார்ந்த பொருளும், தலைவி, நாயகி என்ற வார்த்தைக்கு மனைவி என்ற பொருளும் வரும்போது, இங்கே பெண் என்பவள் கணவர்களுக்கு கட்டுப்பட்டு வாழவேண்டும் என்பதையே இந்தச் சமூகம் எதிர்பார்கிறது என்பது தெளிவாக விளங்குகிறது. இன்றும் இந்த கட்டுப்பாடுகள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன.






இன்றுவரை பெண்களின்மீது திணிக்கப்படும் அனைத்து மதம் சார்ந்த பண்டிகைகளும், விரதங்களும் கணவரின் நீண்ட ஆயுள் வேண்டியே மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியா முழுவதிலும், அதிலும் வட மாநிலங்களில் இன்றும் தண்ணீர்கூட அருந்தாமல், பல மணி நேரம் பெண்கள் விரதங்களைப் பின்பற்றி வருவதைப் பார்க்கும்போது, இன்றும் பெண்கள் பதிவிரத பூஜைகளை நடத்திக் கொண்டுதான் இருக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. கணவருக்கான விரதங்களை மூடநம்பிக்கைகளை இன்றும் பெண்கள்தான் தங்கள் தலையான கடமையாக நினைத்து, கட்டிக் காத்து வருகின்றனர்.

ஆனால் ஆண்கள், மனைவிக்காக எந்த விரதமும், எந்த பூஜையும் செய்வது இல்லை. பெண்கள் விரத நாட்களில்கூட, ஆண்கள் உண்ட பிறகே பெண் உண்ண வேண்டும் என்ற சட்டங்கள் இன்றும் மாறவில்லை.

'பெண்களைப்பற்றிய தர்மசாஸ்திரங்கள் என்பதும், பெண்களைப்பற்றிய நூல்கள் என்பதும் பெண்களால் எழுதப்பட்டிருக்குமானாலும் அல்லது கற்பு என்கின்ற வார்த்தைக்குப் பெண்களால் வியாக்கியானம் எழுத ஏற்பட்டிருந்தாலும் கற்பு என்பதற்கு, 'பதிவிரதம்' என்கின்ற கருத்தை எழுதியிருப்பார்களா?' என்கிற தந்தை பெரியாரின் கேள்விகளுக்கு இன்றும் பதில் இல்லை.

'புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷைகளில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்குக் காரணம் ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை' என்ற பெரியாரின் கருத்தை முதலில் பெண்கள் உணர்ந்தால் மட்டுமே, அடுத்த நூற்றாண்டு தொடங்கும் முன்பு, ஆணாதிக்கக் கொள்கைகளை உடைக்க முயற்சியாவது செய்யமுடியும்.

'கற்புக்காக பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச்செய்யும்படியான நிர்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும். கற்புக்காக புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாய வேண்டும்' என்று பல வருடங்களுக்கு முன்பே தந்தை பெரியார் பெண்களுக்காகக் குரல் எழுப்பி இருந்தாலும் இன்றும் பெண்கள் பிடிக்காத வாழ்க்கையை கட்டி அழுது

(7ஆம் பக்கம் பார்க்க...)

# கோல்ட்ரிப் இருமல் மருந்து சாப்பிட்ட 20 குழந்தைகள் பலி: ஒன்றிய அரசிடம் உலக சுகாதார நிறுவனம் விளக்கம்




கோல்ட்ரிப் இருமல் மருந்து விவகாரம் தொடர்பாக உலக சுகாதார அமைப்பு ஒன்றிய அரசிடம் விளக்கம் கேட்டுள்ளது. மத்திய பிரதேசம் சிந்த்வாரா மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கோல்ட்ரிப் இருமல் மருந்து காரணமாக முதல் குழந்தை உயிரிழந்தது. ஆனால், அடுத்தடுத்த நாட்களில் மேலும் சில குழந்தைகள் சிறுநீரக செயலிழப்பால் அடுத்தடுத்து உயிரிழந்தன. மொத்தம் 20 குழந்தைகள் அங்கு உயிரிழந்தன. இதையடுத்து குழந்தைகள் உயிரிழந்த விவகாரத்தில், அந்த இருமல் மருந்தை தயாரித்த தனியார் மருந்து ஆலையின் உரிமையாளரான ரங்கநாதன் கைது செய்யப்பட்டார். காஞ்சிபுரம் அருகே சுங்குவார்ச்சத்திரத்தில் அவரது மருந்து ஆலை உள்ளது.

தமிழக போலீஸாரின் உதவியுடன் மத்திய பிரதேச மாநில போலீஸார் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதனிடையே குழந்தைகளின் உயிரிழப்பிற்கு காரணமான கோல்ட்ரிப் மருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பான விவரங்களை தருமாறு ஒன்றிய அரசிடம் உலக சுகாதார அமைப்பு கேட்டுள்ளது. இந்தியா அளிக்கும் பதிலை பொறுத்தே உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுப்பது தொடர்பாக முடிவு செய்யப்படும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. மேலும் மருந்து பொருட்களில் கடுமையான சோதனை மற்றும் ஒழுங்குமுறை மேற்பார்வையை கடைப்பிடிக்குமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஒன்றிய சுகாதார சேவைகள் இயக்குனரகம் அறிவுறுத்தி உள்ளது. (ஐ)



## 40 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தாயின் வழியில் அழகி பட்டத்தை வென்ற மகள்

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு 'மிஸ் பிளாக்பூல்' அழகிப் பட்டத்தை வென்ற தனது தாயின் வழியில், தற்போது அவரது மகளும் அதே பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார். கடந்த 1984ம் ஆண்டு 'மிஸ் பிளாக்பூல்' அழகி போட்டி நடந்த போது, விக்கி என்பவர் 'மிஸ் பிளாக்பூல்' பட்டத்தை வென்றார். இந்த நிலையில், கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் கழித்து சமீபத்தில் நடைபெற்ற போட்டியில், அவரது 20 வயது மகள் தபிதா பென்னட் 'மிஸ் பிளாக்பூல்' பட்டத்தை வென்று அசத்தியுள்ளார்.

இந்த நிகழ்வு இங்கிலாந்து ஊடகங்களில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது. தற்போது 'மிஸ் லங்காஷயர்' பட்டத்தையும் வென்றுள்ள தபிதா, வரும் நவம்பர் 21ம் தேதி நடைபெற உள்ள 'மிஸ் இங்கிலாந்து' இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். குறிப்பிடத்தக்க வகையில், இவரது தாய் விக்கியும் தனது காலத்தில் 'மிஸ் இங்கிலாந்து' இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தார். இதன் மூலம், 'மிஸ் இங்கிலாந்து' இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற முதல் தாய் - மகள் என்ற பெருமையை இவர்கள் பெற்றுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் கருதுகின்றனர்.

மேலும், தபிதா வெறும் 50 பவுண்டு மதிப்புள்ள பழைய ஆடையை அணிந்து 'மிஸ் லங்காஷயர்' பட்டத்தை வென்றது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதுகுறித்து தபிதாவின் தாய் விக்கி கூறும்போது, 'அழகிப் போட்டிகளுக்கான மதிப்பீட்டு முறைகள் தற்போது மாறிவிட்டன. அந்தக் காலத்தில் அழகாக இருப்பவர்களுக்கு மட்டுமே பட்டம் கிடைத்தது. ஆனால் இப்போது அப்படி இல்லை. நிறைய வழிமுறைகள் பின்றப்படுகின்றன' என்றார். (ஐ)



பாகிஸ்தானில் பாதுகாப்பு படையினர் மற்றும் பயங்கரவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 30 பேர் பலியாகி உள்ளனர். மோதலில் 19 பயங்கரவாதிகள் மற்றும் 11 பாதுகாப்பு படையினர் இறந்ததாக பாகிஸ்தான் ராணுவம் அறிவித்தது. (ஐ)

## டென்மார்கில் 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை



மனநலனைக் காக்கும் விதமாக, 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களை பயன்படுத்த டென்மார்க் அரசு தடை விதித்துள்ளது. பிரதமர் மெட் ஃபிரடெரிக்சன், பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இந்த திட்டத்தை அறிவித்துள்ளார். ஆனால் நடைமுறையில் எவ்வாறு மற்றும் எப்போது செயல்படும் என்பதை தெரிவிக்கவில்லை.

டென்மார்க்கில் நடத்தப்பட்ட ஆய்வில் 11 வயதுக்கும் 19 வயதுக்கு இடைப்பட்ட இளையர்களில் 60 விழுக்காட்டினர் வெளியே செல்வதற்குப் பதிலாக வீட்டிலேயே இருக்க விரும்புகிறார்கள் என்று தெரியவந்துள்ளது. அது சமூக ஊடகங்களின் விளைவு என்று பிரதமர் சுட்டினார். தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் நம் குழந்தைகளின் குழந்தைப் பருவத்தைக் கொள்ளையடிக்கின்றன. மேலும், அதிகமாக அடிமையாகுவதால் அவர்களது கல்வி நடவடிக்கைகள், உடல் ஆரோக்கியங்கள் பாதிக்கப்படுகின்றது என்றும் பிரதமர் ஃபிரடெரிக்சன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குழந்தைகளிடம் அதிகரித்து வரும் மன அழுத்தம், சோர்வு, சமூகத் தனிமை போன்றவற்றைக் கருத்தில் கொண்டே இம்முடிவு என டென்மார்க் பிரதமர் மெட்டே / பிரெட்ரிக்சன் விளக்கம் அளித்துள்ளார். சமீபத்தில், ஆஸ்திரேலியா 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சமூக ஊடகங்களுக்குத் தடை விதித்தது

## காசாவில் அமைதி.. இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக அதிபர் டிரம்ப் அறிவிப்பு



இஸ்ரேலும் ஹமாஸ/ம் போர் அமைதித் திட்டத்தின் முதல் கட்டத்தில் கையெழுத்திட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் சுமார் 60,000க்கும் அதிகமான பாலஸ்தீன மக்களின் உயிரை பலி கொண்ட போர் தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. எகிப்தில் நடந்த அமைதி ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையின் மூன்றாவது நாளில், ஹமாஸ் குழுவினர் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்கும், அதே நேரத்தில் இஸ்ரேல் தனது படைகளை திரும்பப் பெறும் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக டிரம்ப் தனது எக்ஸ் பதிவில் கூறியதாவது இஸ்ரேலும், ஹமாஸும் அமைதித் திட்டத்தின் முதல் கட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இதனால் அனைத்து பணயக்கைதிகளும் மிக விரைவில் விடுவிக்கப்படுவார்கள்.

அமைதியை உருவாக்க, முதல்கட்ட ஒப்பந்தத்தின் படி தனது பாதுகாப்பு படையினரை இஸ்ரேல் திரும்ப பெறும். அனைத்து தரப்பினரும் நியாயமாக நடத்தப்படுவார்கள். அரபு, முஸ்லிம் நாடுகள், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிற்கும் இது ஒரு சிறந்த நாள். இதற்காக, எங்களுடன் இணைந்து பணியாற்றிய கத்தார், எகிப்து மற்றும் துருக்கியின் மத்தியஸ்தர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். அமைதியை ஏற்படுத்துபவர்கள் பாக்கியவான்கள் என அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

இதையடுத்து இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தனது எக்ஸ் தளத்தில் கூறியதாவது இதை ஒரு சிறந்த நாள் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதற்கும், எங்கள் அன்புக்குரிய பணயக்கைதிகள் அனைவரையும் வீட்டிற்கு கொண்டு வருவதற்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறியுள்ளார். (ஐ)

## அரியாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபட்டனர். இந்நிலையில் இன்று வியாழக்கிழமை நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனத்தில் அந்த இடத்துக்குக் கழிவுகளைக் கொண்டு வந்த சமயம் அந்தப் பகுதியில் மக்கள் கூடி வாகனத்தை மறித்து எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் அங்கிருந்தவர்களோடு பேச்சுக்களை நடத்தி, இந்த முறை வாகனத்தை அனுமதிக்குமாறு கோரியதை அடுத்து, வாகனத்தைச் செல்ல மக்கள் அனுமதித்தனர்.

அதன்பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் தங்குமிடத்தினர் அந்தப் பகுதியில் உள்ள தமது காணி ஒன்றில் கழிவுகளைக் கொட்ட வந்த போது, அவர்களின் வாகனத்தை மறித்துச் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அடாவடியில் ஈடுபட்டு பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் எனக் குற்றஞ்சாட்டி 8 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலையைக் குப்பை மேடாக்கும் முயற்சியைத் தடுக்கப் போராடியவர்களைப் பொலிஸார் பொய்க் குற்றஞ்சாட்டி கைது செய்துள்ளனர் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அருகிலுள்ள கடற்பரப்புக்களில் நேற்று இரவு ஐந்து படகுகளில் அத்துமீறி வந்து மீன்பிடித்த 47 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், ஐந்து படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் கடற்படை இன்று தெரிவித்துள்ளது.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறிப்பிட்ட ஒரு நபர் தொடர்பில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை இன்று முற்பகல் மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அரசடி வாழ் மக்கள்,

"குறித்த நபர் நீண்டகாலமாகப் பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு சிறைக்கும் சென்று வருகின்றார்.

எமது அரசடி பகுதியில் வாள்வெட்டு சம்பவங்கள் இவரது பின்னணியில்தான் நடைபெற்று வருகின்றன.

இவை குறித்து பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால் நாம் நாளாந்தம் பொரும் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றோம்.

இந்நிலையில், அண்மையில் அரசடியில் குறித்த சட்டவிரோத நபரால் வெளியூரில் இருந்து சிலர் வரவழைக்கப்பட்டு வாள் வெட்டுச் சம்பவம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது எமது பிள்ளைகள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள தற்காப்பு நடவடிக்கையில் இறங்கினர்.

இதன்போது ஒருவர் காயங்களுக்குள்ளானார். இதனைக்காரணமாக வைத்து எமது ஏழு பிள்ளைகளைப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

ஆனால் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களைப் பொலிஸார் கைது செய்யவில்லை.

இந்த நிலையில்தான் எமது பிள்ளைகள் மீது தேவையற்ற வகையில் சோடிக்கப்பட்ட வழக்குகள் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாம் இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம்." - என்றனர்.

## குருக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில்

கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு விசாரணை இன்று வியாழக்கிழமை களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதிவான் த.பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் கடந்த 23.09.2025 கொழும்பு பிரதம சட்ட வைத்திய அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட, அகழ்வு தொடர்பான பாதீடு மற்றும் அதனுடைய விரிவாக்கம் மன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் ஊடாக நிதி அமைச்சுக்கும் நீதி அமைச்சுக்கும் அனுப்பபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கமானது இன்று குறித்த செயன்முறை தொடர்பான விடயங்களின் முன்னேற்றங்கள் ஆராய அழைக்கப்பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.

# பெக்கோ சமனின் மனைவிக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 09

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள "பெக்கோ சமனின்"மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவர் கடும் பாதுகாப்பு மத்தியில் இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"பெக்கோ சமனின்"மனைவியுடன் தொடர்பில் இருந்தவர்களுக்குச் சொந்தமான 13 வங்கிக்கணக்குகளைத் தற்காலிகமாக முடக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கெஹெல்பத்தர பத்மே', 'கொமாண்டோ சலிந்த', 'பாணந்துறை நிலங்க', 'பெக்கோ சமன்", "பெக்கோ சமனின்" மனைவி உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட பாதாள உலக கும்பலில் இருந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவி கடந்த ஒகஸ்ட் 29 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இவ்வாறு பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்ட "கெஹெல்பத்தர பத்மே" உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட பாதாள உலகக் கும்பல் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பெண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண பொதுமக்களிடம் உதவி கோரல்!

கொழும்பு, ஒக். 09



விபத்தில் சிக்கி உயிரிழந்த பெண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண சீதுவைப் பொலிஸார் பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாபம் - கொழும்பு வீதியில் கடந்த செப்டெம்பர் 25 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் மோதி படுகாயமடைந்த பெண் ஒருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண்ணின் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, பொதுமக்களிடம் உதவி கோரி உயிரிழந்த பெண்ணின் புகைப்படம் ஒன்றைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் புகைப்படத்தில் உள்ள பெண் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் சீதுவை பொலிஸ் நிலையத்தின் 071 - 8591637 அல்லது 011 - 2253524 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் இயங்கி வரும் உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை!

மன்னார் மாவட்டத்தில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் இயங்கி வரும் உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் மன்னார் நகரசபை சுகாதார குழுவினர் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

அதன்படி இன்றையதினம் மன்னார் மூர் வீதியில் உள்ள மதஸ்தலம் ஒன்றினுள் இயங்கி வந்த உணவகத்தில் முன்னெடுக்கப்பட சோதனை நடவடிக்கையின் போது, பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டது.

குறிப்பாக உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாத நிலை, தலையுறை மற்றும் கையுறி அணியப்படாத நிலை, அதிகளவான இளையவர்கள் பணியமர்த்தப்பட்டிருத்தல், கழிவு நீர் உரிய முறையில் அகற்றப்படாத நிலை, அசுத்தமான முறையில் உணவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தல், அசுத்தமான முறையில் உணவுகள் தயாரிக்கப்பட்டிருத்தல் போன்ற பல்வேறு குறைபாடுகள் குறித்த உணவகத்தில் அவதானிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த உணவகம் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மன்னார் நகரசபை பகுதிக்குள் இயங்கி வரும் உணவகங்கள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வரும் நிலையில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் இயங்கி வரும் உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# பெரியாரின் பெண்ணியம்..................

கொண்டுதான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

ஒழுக்க விதிகளைச் சுமந்து வாழ்ந்துவரும் பெண்களால், ஒரு பொழுதும் தனக்கு பிடிக்காத, தன்னால் சகித்துக் கொள்ள முடியாத திருமண வாழ்க்கையில் இருந்து வெளி வர முடிவதே இல்லை. ஒழுக்கம் என்ற வார்த்தைக்காக, குடும்ப கௌரவத்திற்காக, காதலே இல்லாத கணவராக இருந்தாலும், உடலாலும், உள்ளத்தாலும் காயப்படுத்தினாலும், இல்லை வேறு ஒரு பெண்ணை தன் கணவர் மணந்துகொண்டாலும், எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு பெண்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒரு கட்டத்தில் பிடிக்காத வாழ்வில் இருந்து விடுபட முடியாமல், தற்கொலை முடிவுகளை நோக்கியும் தள்ளப்படுகின்றனர்.

குடும்ப வன்முறை காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருவதற்கு இந்த ஒழுக்க விதியும் ஒரு முக்கிய காரணம். இதில் படித்த, பொருளாதார சுதந்திரம் உடைய பெண்களும் இங்கு விதி விலக்கு இல்லை என்பதே உண்மை. குடும்ப வன்முறை காரணமாக சமீபத்தில் நடந்து முடிந்த சில படித்த பெண்களின் தற்கொலைகளே இதற்கு சான்று.

இன்று ஒவ்வாத திருமண பந்தத்தில் இருந்து ஒரு பெண் சட்டப்படி விலக நினைத்து, நீதித் துறையை அனுகினாலும், அத்தனை எளிதில் அவர்களுக்கு நீதி கிடைப்பது இல்லை. சட்டப்படி விவாகரத்து பெற்றாலும், அதில் எத்தனை பெண்கள் மீண்டும் மறுமணம் செய்து கொள்கின்றனர்? இங்கும் ஒழுக்க விதிகளே முன் நிற்கின்றன. அதிலும் குழந்தைகள் இருந்தால் அதனை வளர்க்கும் முழு பொறுப்பும் பெண்களுக்கே, இதில் மறுமணம் என்ற வார்த்தைகளுக்கே இடம் இல்லை.

'கற்புக்காக மனதுள் தோன்றும் உண்மை அன்பை, காதலை மறைத்துக்கொண்டு, காதலும், அன்பும் இல்லாதவனுடன் இருக்கவேண்டும் என்கின்ற சமூகக் கொடுமையும் அழியவேண்டும்' என்கிற பெரியாரின் வார்த்தைகள் என்று சமூகத்தால் ஏற்று கொள்ளப்படுகிறதோ, அன்று தான் உண்மையில் பெண்கள் இன்புற்று வாழ முடியும்.

ஒழுக்கம், பதிவிரதம் என்ற பெயரால் பெண்கள் தங்களை வருத்தி, பூஜைகள், விரதங்கள் என்று தங்கள் உடல் நலம் இழந்து, குடும்பப் பணியே தலையான கடமை என்று வீட்டிலே முடங்கி, பொருளாதார சுதந்திரமும் இழந்து, பொருளாதார சுதந்திரம் இருந்தாலும், தன்னிச்சையாக செயல்படாமல், தந்தை, கணவர், மகன் என்று இன்றும் ஒரு ஆண்மகனை சார்ந்தே வாழ்ந்து வரும் நிலையை பார்க்கும்போது, பெண் ஏன் அடிமையானாள் என்ற கேள்விக்கு பதில் இந்த சமூகம் மட்டும் இல்லை, இன்றும் ஒழுக்க விதிகளையும் பதிவிரதத்தையும் தூக்கி பிடித்து நிற்கும் பெண்களும் தான் காரணம் என்பது தெளிவாக விளங்குகின்றது.

பெண்கள் சுயகௌரவம், சுயமரியாதை, சுயஅன்பு என்று எதுவும் இல்லாமல் இன்றும் வாழும் நிலையைப் பார்க்கும்போது, இந்தச் சமுதாயத்தில், அன்றும் இன்றும் தந்தை பெரியாரின் பெண்ணியம் பேசப்பட வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறது.

## ஜெனிவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

அந்த வருடங்கள்:

2009, 2012, 2013, 2014, 2015, 2017, 2019, 2021, 2022, 2024 (இந்த முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானம்).

இந்தத் தீர்மானங்களுக்காக அந்தந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் வெவ்வேறு கொள்கைகளைப் பின்பற்றியுள்ளன.

சில நேரங்களில் அரசாங்கங்கள் தீர்மானங்களுக்கு ஆதரவளித்து அவற்றில் பங்குதாரர்களாகவும் இருந்தன (2015, 2017, 2019). வேறு சந்தர்ப்பங்களில், அப்போதைய அரசாங்கங்கள் தீர்மானங்கள் குறித்து வாக்கெடுப்புக்குச் சென்றன (2012, 2013, 2014, 2021, 2022).

வேறு சில சமயங்களில், இலங்கை அரசாங்கமே இலங்கை தொடர்பாக தனது சொந்தத் தீர்மானத்தை முன்வைத்தது (2009).

மேலும், அப்போதைய அரசாங்கங்கள் வாக்கெடுப்புக்குச் செல்லாமல், தீர்மானத்தின் சில அத்தியாயங்களை மட்டும் எதிர்த்தன. இந்த அனைத்துத் தீர்மானங்களிலிருந்தும் வெளிப்படும் இரண்டு பொதுவான விடயங்கள் உள்ளன.

1. தேசிய பிரச்சினையை நிர்வகிக்காதது

முன்னைய எந்த அரசாங்கமும் தேசியப் பிரச்சினையை முறையாக நிர்வகிக்காததே ஜெனீவாவில் நடக்கும் இந்தச் செயல்பாட்டிற்கான அடிப்படைக் காரணமாகும்.

இந்தத் தீர்மானங்கள் 16 ஆண்டுகளுக்கும் மேலாக மனித உரிமைகள் கவுன்சிலில் நிறைவேற்றப்படுவதற்கான முக்கிய காரணம் இதுதான். போர்ச் சூழ்நிலைகளில் மனித உரிமைப் பிரச்சினைகள் எழும் என்பதை நாம் அறிவோம். ஆனால், பெரும்பாலான நாடுகள் தங்கள் உள்நாட்டு நிறுவனங்கள் மூலம் மனித உரிமைப் பிரச்சினைகளைக் கையாண்டு தீர்த்துக் கொள்கின்றன, மேலும் தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துகின்றன. ஆனால், இலங்கையின் கடந்த கால அரசாங்கங்கள், மனித உரிமைப் பிரச்சினைகளை உள்நாட்டில் தீர்த்து, நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, பிரிவினைவாத, இனவாத மற்றும் மதவாத அரசியலில் ஈடுபட்டு, நாட்டைப் பிளவுபடுத்தி, அனைத்து இனங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த மக்களின் உரிமைகளை மேலும் வரையறுத்து மற்றும் மீறுவதன் மூலம் இலங்கையை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத நாடாக மாற்றின. ஜெனீவா தீர்மானத்தின் பரிணாமத்தைப் பார்த்தால் இது தெளிவாகிறது.

2009இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முக்கிய கோரிக்கை, அப்போதைய ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரிடம் உறுதியளித்தபடி, அனைத்து சமூகங்களின் பிரச்சினைகளையும் தீர்க்கும் ஒரு நிலையான தேசியத் தீர்வை நடைமுறைப்படுத்துவதுதான். ஆனால் அது நடக்கவில்லை.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் அந்தச் செயல்முறை நடைபெறாததால், 2012இல் ஒரு சில நாடுகள் இணைந்து இலங்கை குறித்து மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றின.

2012 தீர்மானத்தின் முக்கிய கோரிக்கை, அப்போதைய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (டுடுசுஊ) பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொண்டது.

ஆனால் அந்தப் பரிந்துரைகளும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால், 2013இல் பேரவையில் மீண்டும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும், மேலும் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய ஆணைக்குழு மூலம் பிரச்சினைகளைத் தீர்க்குமாறும் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுவும் நடக்கவில்லை.

தங்கள் சொந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக, அப்போதைய அரசாங்கங்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இந்தத் தேசியப் பிரச்சினைகளையும் ஜெனிவா செயல்முறையையும் பயன்படுத்தின. மக்கள் பிரச்சினைகளை அரசியல் பந்தாக மாற்றியதன் விளைவு என்னவென்றால், இலங்கைக்கு இருந்த சர்வதேச நம்பகத்தன்மை இழக்கப்பட்டது. இதனால், இலங்கை தனது சொந்த தேசிய நிறுவனங்கள் மூலம் மனித உரிமைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்ற கருத்து உருவானது.

இதன் காரணமாக, 2021க்குள், மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மீறல்கள் தொடர்பான சான்றுகளைச் சேகரிக்க ஒரு சிறப்புப் பிரிவை நிறுவியது. போர் முடிந்த உடனேயே ஒரு தேசிய பொறிமுறை மூலம் எளிதாகத் தீர்க்கப்பட்டிருக்கக்கூடிய இந்த ஜெனீவாப் பிரச்சினை, குறுகிய அரசியல் நோக்கங்கள் மற்றும் தொலைநோக்குப் பார்வையற்ற தலைமை காரணமாக 2021க்குள் சர்வதேசமயமாக்கப்பட்டு முடிந்துவிட்டது.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகவும், நமது அரசாங்கமும் நாட்டைப் பொறுப்பேற்றபோது (செப்டெம்பர் 2024 மற்றும் ஒக்டோபர் 2024), இந்தச் சீரழிவு ஏற்கனவே நிகழ்ந்துவிட்டது.

நமது குறிக்கோள்:

வறுமையை ஒழித்தல், ஊழலை ஒழித்தல் மற்றும் ஒற்றுமையான நாட்டை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான ஆணையை நடைமுறைப்படுத்துவதன் மூலம், அனைத்து சமூகங்களையும் சேர்ந்த நமது மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி, சர்வதேசமயமாக்கப்பட்ட மனித உரிமைகள் செயல்முறையை எப்படியாவது தேசியத் தளத்திற்குக் கொண்டு வந்து, வலுவான மற்றும் சுதந்திரமான உள்நாட்டு நிறுவனங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதே நமது குறிக்கோள் ஆகும்.

அதற்கான பல முக்கியமான நடவடிக்கைகளை நாங்கள் ஏற்கனவே எடுத்துள்ளோம்.

2. வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்கான சவால்

மனித உரிமைகள் பேரவை அமைப்பு மற்றும் கலவையின்படி இலங்கை போன்ற ஒரு நாடு வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதில் உள்ள சவால் இரண்டாவது விடயமாகும்.

ஐ.நா. பொதுச் சபையில் ஒவ்வொரு இறையாண்மை கொண்ட நாட்டிற்கும் ஒரு வாக்கு உள்ளது, ஆனால் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையில் அப்படியில்லை. 193 ஐ.நா. உறுப்பு நாடுகளில், இந்த பேரவையில் ஒரே நேரத்தில் 47 நாடுகள் மட்டுமே 3 வருட காலத்திற்கு உறுப்பினர்களாக இருக்க முடியும். இந்த உறுப்புரிமையும் பிராந்திய அடிப்படையில் வழங்கப்படுகிறது.

ஐரோப்பா போன்ற சில பிராந்தியக் குழுக்கள் பொதுவாக ஒரே நிலைப்பாட்டில் இருப்பதால், மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் ஒரு தீர்மானம் தோற்கடிக்கப்படுவது மிகவும் அரிது. இலங்கையைப் பொறுத்தவரை, நமது நாடு தொடர்பான ஒரு தீர்மானம் ஒரு முறை மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

அது 2009இல் நமது அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்மானம். அதன்பிறகு, இலங்கை தொடர்பான அனைத்துத் தீர்மானங்களும் வாக்கெடுப்புக்குச் சென்றபோது, அரசாங்கத்தின் நிலைப்பாடு தோல்வியடைந்தது. மேலும், இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகக் கிடைத்த சிறிய வாக்குகளின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது, மேலும் நிலைப்பாடு எடுக்காத நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2012இல் 47 வாக்குகளில் 15 வாக்குகளே கிடைத்தன (24-15-8).

2013இல் 13 வாக்குகள் (25-13-8).

2014இல் 12 வாக்குகள் (23-12-12).

2021இல் 11 வாக்குகள் (22-11-14).

2022இல் 7 வாக்குகள் (20-20-7).

வியக்கத்தக்க விடயம் என்னவென்றால், அப்போதைய அரசாங்கங்கள் தோல்வியடையப் போகின்றோம் என்று தெரிந்திருந்தும், இந்த வாக்கெடுப்புப் பிரசாரங்களுக்காக மில்லியன் கணக்கான பொதுப் பணத்தைச் செலவிட்டன.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் மனித உரிமைகள் பேரவையில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளுக்குப் பயணம் செய்தனர். மேலும் அந்த வாக்குகளைப் பெற அந்த நாடுகளுக்குப் பல வழிகளில் உதவினர்.

ஜெனீவாவில் அமர்வு நடந்த நாட்களில், பெரிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழுக்கள் பல நாட்கள் சுவிட்சர்லாந்தில் தங்கி நேரத்தையும் பொதுப் பணத்தையும் செலவிட்டன.

வாக்கெடுப்பில் தோல்வியடைவது உறுதி என்று தெரிந்திருந்தும், இவை அனைத்தையும் அவர்கள் செய்ததற்குக் காரணம், ஊடக விளம்பரங்கள் மூலம் நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்துவது மட்டுமே. இதிலும் பெரிய சிக்கல் என்னவென்றால், வாக்கெடுப்பு கோருவதன் மூலம் மோதல் போக்கைக் கையாள்வது, ஏற்கனவே சர்வதேசமயமாக்கப்பட்ட இந்தப் பிரச்சினையை உள்நாட்டுத் தளத்திற்குக் கொண்டு வந்து தீர்ப்பதற்கான வாய்ப்பை அடைத்துவிடுகிறது.

60 ஆவது மனித உரிமைகள் பேரவை அமர்வு (தற்போதைய அரசாங்கம்) இந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவை அமர்வில், ஒக்டோபர் 2024இல் நமது அரசாங்கம் அமைக்கப்பட்ட பிறகு நான் உரையாற்றினேன்.

அனைத்து இலங்கையர்களின் பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாத்து, இனவாத மற்றும் மதவாத அரசியலை நிராகரித்து, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப நமது சொந்த தேசியப் பொறிமுறைகள் மூலம் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து பேரவையிலுள்ள நாடுகளுக்கு நான் தெரிவித்தேன்.

இதற்குப் பிறகு, இந்த ஆண்டு ஜூன் மாதம் மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டர்க் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் ஒருவர் 9 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கைக்கு வந்ததோடு, அரசாங்கம் பொறுப்பேற்று ஒரு வருடம் ஆவதற்கு முன்பே அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அவர் இலங்கைக்கு வந்தார்.

இந்த விஜயத்தின்போது, அவர் ஜனாதிபதி மற்றும் அரசாங்க அதிகாரிகள், மதத் தலைவர்கள், பொதுமக்கள், சிவில் சமூகம் மற்றும் அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல சமூகப் பிரிவுகளுடன் வெளிப்படையாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கையின் உண்மையான நிலையை அவர் நேரில் கண்டார்.

இந்த விஜயத்திற்குப் பிறகு, உயர் ஆணையர் இலங்கை குறித்து மிகவும் நேர்மறையான கருத்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கையின் சமூகத்தில் உள்ள முற்போக்கான மாற்றத்திற்கான போக்கு, பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இலங்கை அரசாங்கத்தின் உண்மையான வெளிப்படைத்தன்மை மற்றும் உள்நாட்டுச் செயல்முறைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இலங்கையின் ஆரம்ப முயற்சிகளை அவர் பாராட்டினார்.

கடந்த செப்டெம்பர் மாதம் உயர் ஆணையாளர், பேரவையின் 60வது அமர்வுக்குச் சமர்ப்பித்த அறிக்கையிலும் இந்தக் நேர்மறையான கருத்துக்களை அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

வலுவான உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் மனித உரிமைப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த வரலாற்று வாய்ப்பைப் பயன்படுத்துமாறு அவர் இலங்கையிடம் கேட்டுக் கொண்டார்.

சர்வதேசமயமாக்கப்பட்ட பிரச்சினை மற்றும் புதிய அணுகுமுறை

தேசியப் பிரச்சினைகளும் மக்களின் மனித உரிமைகளும் பல ஆண்டுகளாக அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக, 2021க்குள் ஜெனீவா தீர்மானம் சர்வதேசமயமாக்கப்பட்டுவிட்டது.

2021இல் நிறைவேற்றப்பட்ட 46ஃ1 தீர்மானம் மூலம், இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மீறல்கள் தொடர்பான சான்றுகளைச் சேகரிக்க, உயர் ஆணையர் அலுவலகத்தில் ஒரு பிரிவு நிறுவப்பட்டது.

உள்நாட்டுப் பொறிமுறையற்ற இதுபோன்ற அமைப்புகளை இலங்கை ஏற்றுக்கொள்ளாது என்று நான் (வெளிவிவகார அமைச்சராக) மற்றும் எமது ஜெனீவா நிரந்தரப் பிரதிநிதி இருவரும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் பேரவையில் மிகத் தெளிவாகப் பிரகடனம் செய்தோம்.

சர்வதேசப் பொறிமுறைகளை நிராகரிக்கும் அதே வேளையில், எங்கள் முயற்சி என்னவென்றால், அரசியல்மயமாக்கப்பட்டதால் சர்வதேசமயமாக்கப்பட்ட இந்தச் சிக்கல்களை நமது சொந்த நாட்டின் சுதந்திரமான செயல்முறைகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் தீர்க்க அனைவரின் ஆதரவையும் பெறுவதே ஆகும்.

இது ஒரு வருடம் போன்ற குறுகிய காலத்தில் முடிவடையும் பணி அல்ல, ஆனால் அதற்கான அடித்தளத்தை நாங்கள் அமைத்து வருகிறோம். இந்த முயற்சிக்கு மனித உரிமைகள் பேரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. மனித உரிமைகளுக்கு முக்கியமான சட்ட அமலாக்க நிறுவனங்கள் மற்றும் நமது நீதித்துறை அமைப்பை நாங்கள் பலப்படுத்தி, சுதந்திரமாக்கி வருகிறோம். காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் ஆகியவற்றை பலப்படுத்தி சுதந்திரமாக்கி வருகிறோம். போர் முடிந்து 16 ஆண்டுகளுக்குப் பிறகும் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்து, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கைகளுக்கு இணங்க மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பயங்கரவாதத்தை ஒடுக்கும் சட்டத்தை விரைவில் கொண்டு வர உள்ளோம்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்திற்கு மனித உரிமைகளைப் பாதுகாக்கும் திருத்தங்களைக் கொண்டு வர எதிர்பார்க்கின்றோம்.

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை அமைக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி போரின் முடிவில் வலியுறுத்தியது. அந்தக் காலத்திலேயே இந்த தேசிய ஆணைக்குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், இன்று ஜெனீவா தீர்மானமோ அல்லது இந்த விவாதமோ இருந்திருக்காது. எனவே, விரைவில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான சட்டத்தை இந்தப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி, அந்தக் ஆணைக்குழுவின் பணிகளைத் தொடங்க நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மேலும், சுதந்திரமான பொது வழக்கறிஞர் அலுவலகத்தை அமைக்கவும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இந்த முற்போக்கான நடவடிக்கைகளை நாங்கள் ஜெனீவாவிற்குக் காட்டுவதற்காக எடுக்கவில்லை. பல ஆண்டுகளாக அரசு அடக்குமுறைக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் ஆளான ஒரு அரசியல் இயக்கமாக, மனித உரிமைகள் மீதுள்ள உண்மையான அர்ப்பணிப்பு மற்றும் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கான உண்மையான அனுதாபம்காரணமாகவே இந்த நடவடிக்கைகளை எடுக்கிறோம். இந்த நடவடிக்கைகளை நாங்கள் போரை முடித்த இராணுவ அதிகாரிகளை அல்லது வேறு எந்த சமூகத்தையும் இலக்கு வைக்க எடுக்கவில்லை என்பதையும் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

2024 ஒக்டோபர் 6 தீர்மானம்

கடந்த ஒக்டோபர் 6ஆம் திகதி இலங்கை தொடர்பான தீர்மானம் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்றப்பட்டதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

முன்பு நான் தெளிவுபடுத்தியபடி, மனித உரிமைகள் கவுன்சிலில் வாக்கெடுப்பைக் கோருவது பயனற்ற செயல்.

வாக்கெடுப்பில் தோல்வியடைவது தெரிந்திருந்தும், பொதுப் பணத்தையும் காலத்தையும் வீணடித்து, கடந்த அரசாங்கங்கள் செய்த பயனற்ற, பொதுமக்களுக்கு எதிரான காட்சிப்படுத்தலில் ஈடுபடுவது நமது அரசாங்கத்தின் கொள்கை அல்ல.

ஒக்டோபர் 6ஆம் திகதி இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டபோது, நமது நிரந்தரப் பிரதிநிதி இலங்கையின் நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவித்தார். இந்த ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில், இதற்கு முன்னர் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட தீர்மானங்களுடன் ஒப்பிடுகையில் பல நேர்மறையான அம்சங்கள் இருந்தன.

இலங்கையில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றம், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், ஊழலை ஒழித்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய வேலைத்திட்டம் ஆகியவற்றை அது பாராட்டியுள்ளது. அதே நேரத்தில், இந்தத் தீர்மானம் 2021 தீர்மானத்தின் நீட்சியாக இருப்பதால், அதன் கடைசி அத்தியாயதத்தன் பணியைத் தொடர ஒப்புதல் அளித்துள்ளது. உள்நாட்டு நிறுவனங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க இதில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

நான் முன்பு குறிப்பிட்டது போல, இந்த பொறுப்புக்கூறல் திட்டம் உள்நாட்டுப் பொறிமுறையற்றது என்பதால், நமது அரசாங்கம் அதை நிராகரிக்கின்றது. இது பிளவுகளைத் தீவிரமாக்கும் மற்றும் அரசாங்கம் தொடங்கியுள்ள வேலைத்திட்டங்களைத் தடங்கலடையச் செய்யும் என்பதை நாங்கள் சுட்டிக் காட்டினோம்.

அரசாங்கம் தொடங்கியுள்ள உள்நாட்டு வேலைத்திட்டம் மற்றும் மனித உரிமைகள் பேரவை நாடுகளில் அதற்கான நம்பகத்தன்மை அதிகரித்து வருவதன் அடிப்படையில், 2021இல் நிறுவப்பட்ட திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நமது பிரச்சினைகளை நாமே தீர்க்கக்கூடிய ஒரு சூழ்நிலையை விரைவில் உருவாக்க முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். இந்தத் தீர்மானத்தை முன்வைத்த நாடுகளின் குழுவின் சார்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய இராச்சியம், அரசாங்கம் அடைந்துள்ள பாரிய முன்னேற்றத்தைப் பாராட்டியதன் மூலம் இது தெளிவாகின்றது. அந்தக் குழுவைத் தவிர, உலகின் பல்வேறு பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சீனா, பங்களாதேஷ், மாலைதீவுகள், கியூபா, ஜப்பான், தென் கொரியா, ஐரோப்பிய ஒன்றியம், எத்தியோப்பியா, கோஸ்டாரிகா உள்ளிட்ட பல கவுன்சில் உறுப்பு நாடுகள் இலங்கையின் மனித உரிமை முன்னேற்றத்தைப் பாராட்டி அறிக்கைகளை வெளியிட்டன.

செப்டெம்பர் 8ஆம் திகதி இலங்கை தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில், சுமார் 43 நாடுகள் கருத்துத் தெரிவித்தன, மேலும் அவை அனைத்தும் உள்நாட்டுச் செயல்முறைகள் மூலம் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ளன.

முடிவுரை

நமது மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது இந்த சபை விவாதிக்க வேண்டிய ஒன்றல்ல. அந்த உரிமைகளைப் பாதுகாப்பது பொதுமக்கள் பிரதிநிதிகளாகிய நமது தலையாய கடமையும் பொறுப்பும் ஆகும். அனைத்து இலங்கையர்களும் ஒற்றுமையுடன் சுதந்திரமாக வாழும் அமைதியான மற்றும் செழிப்பான நாட்டைப் பற்றிய ஒரு கனவு நமக்கு இருக்கின்றது.

அனைத்து பங்குதாரர்கள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியோருடன் ஆக்கபூர்வமாகச் செயல்படுவதன் மூலம் நமது எதிர்கால சந்ததியினருக்காக இந்தக் கனவை நனவாக்குவதற்கான பயணத்தில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

இந்த தேசிய முயற்சிக்கு ஆதரவளிப்பது நம் அனைவரின் பொறுப்பு என்பதை நினைவூட்டி எனது உரையை முடிக்கின்றேன்."
- என்றார்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய
பயிர்ச்செய்கையும்
பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, ராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!